<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | பி.வா.சா.2 |
| பெயர் | தனபால் | நாள் | 29.10.2024 |
| தகப்பனார் பெயர் | மாதையன் | | |

**<u>வாதிகள் தரப்பில் பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:–</u>**

1) நான் தாக்கல் செய்துள்ள என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையது என்றாலும், மேற்படி முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதிலுள்ள சங்கதிகளை தெரிந்துகொண்டு, அதில் கையெழுத்திட்டுள்ளேன் என்றாலும், சரிதான். மேற்படி முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் "இந்து உத்தியோகம் மாதையன்" என குறிப்பிடப்பட்டுள்ளதற்கு என்ன அர்த்தம் என்றால், உத்தியோகம் என தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தட்டச்சு பிழையாக உள்ளது என இறுதியில் ஏதேனும் சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை. மாதையன் என்பவர் என் தந்தை ஆவார்.

2) என் தந்தைக்கு எதிராக வாதிகள் என்ன பரிகாரம் கோரியுள்ளனர் என்றால், என் பாட்டி கிரயம் பெற்ற சொத்தை வாதிகள் தங்களுடைய சொத்து என உரிமைகோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். என் தந்தை நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளார் என்றால், சரியல்ல. அவருக்கு பக்கவாத பிரச்சனை உள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும், என் தந்தை நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளார் என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

3) என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் வாதிகளின் வழக்கு முன் தடை தீர்ப்பு கோட்பாட்டால் பாதிப்படைகிறது என நான் சொல்லியுள்ள நிலையில், அதற்காக அர்த்தம் என்னவென்றால், தாவா சொத்துடன் சேர்ந்த கூட்டு கிணறு தொடர்பாக இதற்கு முன்பு இதே வழக்கு தரப்பினரிடையே ஒரு வழக்கு நடைபெற்று தீர்ப்பாகிவிட்டது. அதனால் அவ்வாறு சொல்லியுள்ளேன். மேற்படி வாதிகள் மீது தாக்கல்

செய்யப்பட்ட முந்தைய வழக்கு என்னவென்றால், அ.வ.எண்.183/2013 ஆகும். மேற்படி அ.வ.எண்.183/2013 வழக்கிலுள்ள சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை.

4) இதற்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட மேற்படி வழக்கின் மொத்த சொத்து 0.92 சென்ட் என்றால், சரிதான். மேற்படி 0.92 சென்ட் நிலமும் எங்களுக்கு சொந்தம் என சொல்கிறேனா என்றால், ஆமாம். மேற்படி 0.92 சென்ட் நிலத்திற்கும் எங்களிடம் உரிமை ஆவணம் உள்ளதா என்றால், 0.46 சென்ட் நிலத்திற்கு கிரய பத்திரம் உள்ளது. மீதி நிலம் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

5) மேற்படி அ.வ.எண்.183/2013 என்ற வழக்கிலேயே நாங்கள் ச.எண்.65/10 ல் உள்ள 0.92 சென்ட் நிலத்தில் 0.46 சென்ட் நிலம் மட்டும் தான் எங்களுக்கு பாத்தியம் என சொல்லியுள்ள நிலையிலும், மேற்படி 0.46 சென்ட் நிலத்திற்கு மட்டும் தான் தீர்ப்பாகியுள்ள நிலையிலும், தற்போது 0.92 சென்ட் நிலமும் எங்களுக்கு பாத்தியம் என கோருவதும், இவ்வழக்கு முன் தீர்ப்பு தடையால் பாதிக்கப்படுகிறது என கோருவதும் ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. மேற்படி கூட்டு கிணறு 0.46 சென்ட் நிலத்தில் அடங்குவதால், முந்தைய வழக்கில் மேற்படி நிலம் மட்டும் காட்டப்பட்டுள்ளது.

6) மேற்படி முந்தைய வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி 0.92 சென்ட் நிலத்திற்கு தீப்பானதா, 0.46 சென்ட் நிலத்திற்கு தீர்ப்பானதா என்றால், 0.46 சென்ட் நிலத்திற்கு தீர்ப்பானது. ஆனால் மேற்படி வழக்கு கிணறு பாத்தியம் தொடர்பானது மட்டுமே ஆகும். என் பாட்டனார் பெயர் பழனியப்ப கவுண்டர், என் பாட்டி பெயர் சின்னு (எ) சின்னம்மாள். மேற்படி பழனியப்ப கவுண்டர்–சின்னம்மாள் தம்பதியினருக்கு ஒரு ஆண் வாரிசும், ஒரு பெண் வாரிசும் உள்ளனர் என்றால், சரிதான்.

7) தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.11 ஆவணத்தின் அடிப்படையில்தான் தற்போது தாவா சொத்தை பொறுத்து நாங்கள் உரிமை கோருகிறோம் என்றால், சரிதான்.

மேற்படி பி.வா.சா.ஆ.11 ன்படி 0.46 செண்ட் நிலம் எங்களுக்கு பாத்தியப்படுகிறது என்றால், சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ–11 ஆவணம் பொய்யான ஆவணம் என்றாலும், மேற்படி ஆவணம் உண்மையானது எனில், அதை சார் பதிவாளர் மூலம் நாங்கள் நிரூபித்திருப்போம் என்றாலும், சரியல்ல.

8) மேற்படி பி.வா.சா.ஆ.11 கிரய ஆவணத்தில் யார் யாரெல்லாம் சாட்சி கையெழுத்திட்டுள்ளனர் என எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி பத்திரத்தை யார் எழுதினார்கள் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி பத்திரம் எங்கு பதிவு செய்யப்பட்டது என்றால், ஓமலூரில் பதிவு செய்யப்பட்டது என நினைக்கிறேன். எங்களது முன்னோர்களுக்கு ஒருபோதும் வாதிகளின் முன்னோர்கள் அவ்வாறு எவ்வித கிரய பத்திரத்தையும் அளிக்கவில்லை என்றால், சரியல்ல.

9) தாவா சொத்து எங்களது பூர்வீக சொத்து என நான் சொல்லும் நிலையில், என் தந்தையுடன் பிறந்த சகோதரிக்கும் மேற்படி சொத்தில் பங்கு உள்ளது என்றால், சரியல்ல. என் அத்தையின் திருமணத்தின் பொழுது அவருக்கு என் பாட்டனாராலும், என் தந்தையாலும், சீர்வரிசைகள் கொடுக்கப்பட்டுவிட்டது. ச.எண்.65/10 தான் தாவா சொத்தின் மூல சர்வே எண் என்றால், சரிதான். மேற்படி ச.எண்.65/10 தற்போது எத்தனை உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால், ச.எண்கள்.65/10A,10B,10C,10C2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

10) அவ்வாறு என் அத்தைக்கு சொத்து பிரித்து கொடுக்கப்படாத நிலையில், எங்களுக்குள்ளும் பாக பிரிவினை ஆகாத நிலையில், மேற்படி ச.எண்.65/10 முழுவதும் எங்களுக்கு பாத்தியம் எனில் எதனால் மேற்படி ச.எண்.65/10 பல்வேறு உட்பிரிவுகளாக செய்யப்பட்டுள்ளது என்றால், மேற்படி ச.எண்.65/10A கூட்டு கிணறு ச.எண்.65/10B ல் சுமார் 0.9 செண்ட் நிலம் வாதிகளால் தங்கள் பெயரில் மோசடியாக பட்டா செய்யப்பட்டுவிட்டது. தற்போது ச.எண்.65/10C மட்டும் என் தந்தை பெயரில் உள்ளது.

ச.எண்.65/10C மட்டும் தான் எங்களுக்கு பாத்தியம் என நான் சொல்கிறேனா என்றால், தற்போது ச.எண்.65/10C மட்டும் தான் எங்களிடம் உள்ளது.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.